**தேதி :** 21.04.2026 **SC.No. :** 506/2024 PW :1 சின்னராமர்

**(எதிரிகள் மற்றும் எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர். அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜரில்லை.)**

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :</u>**

வழக்கின் 1, 2 எதிரிகள் எனது உடன் பிறந்த சகோதரர்கள் என்றால் சரிதான். 3 வது எதிரி எனது உடன் பிறந்த சகோதரியின் மகன் என்றால் சரிதான். 4 வது எதிரி எனது உடன் பிறந்த சகோதரர் காளிப்பாண்டி என்பவரின் மனைவி என்றால் சரிதான். 5 வது எதிரி எனது உடன் பிறந்த சகோதரர் புஷ்பராஜ் என்பவரின் மனைவி என்றால் சரிதான். வழக்கில் சேதப்படுத்தப்பட்டதாக சொன்ன மோட்டார், வயல் அனைத்தும் பூர்விகமாக பாத்தியப்பட்டது என்றால் சரிதான். எதிரிகளுக்கும், எங்களுக்கும் சரிசமமாக பங்கு உள்ளது என்றால் சரிதான்.

வயல், மோட்டார் சம்பந்தமாக ஏற்கனவே சங்கரன்கோவில் முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண்.237/2012 என்ற ஒரு வழக்கு நிலுவையில் உள்ளது என்றால் சரிதான். சம்பவம் நடந்ததாக சொல்லக்கூடிய நாளுக்கு மறுநாள் காலை புகார் கொடுத்தேன் என்றால் சரிதான். மறுநாள் காலையில் காவல்துறையினர் எங்களை விசாரணை செய்தார்கள் என்றால் 8 நாட்கள் கழித்து வந்தார்கள். காலதாமதத்திற்கான காரணம் போலீசார் என்னிடம் கேட்கவில்லை.

(முதல்விசாரணையில் சொன்னதுபோல் எதிரிகள் மோட்டாரை உடைக்கவில்லை என்று கற்றறிந்த எதிரி தரப்பு வழக்கறிஞர் கூற்றினை கேள்வி கேட்டபோது சாட்சி உங்களுக்கு நேரில் தெரியுமா? என்று வழக்கறிஞரை பார்த்து திரும்ப கேட்டார். சாட்சியிடம் நீதிமன்றம் இவ்வாறு

தான் எதிரி தரப்பு வழக்கறிஞர் கேட்பார் என்று கூறியபிறகும் சாட்சி சாட்சி கூண்டில் நின்று நான் மேல்முறையீடு செய்வேன், நியாயத்திற்கு தான் வந்துள்ளேன் என்று நீதிமன்ற நடவடிக்கைகளை தெரியாமல் பேசினார். இன்றைய தினம் அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜராகவில்லை. சாட்சி ஆக்ரோஷமாக பேசிக்கொண்டிருந்தார். எனவே, அரசு தரப்பு வழக்கறிஞர் வரும் நாளில் சாட்சியை குறுக்கு விசாரணை செய்யலாம் என கருதி குறுக்கு விசாரணை பாதியில் நிறுத்தப்பட்டது.)

J CHRISTAL BABITHA

Digitally signed by J CHRISTAL BABITHA
Date: 2026.04.22 16:00:54 +0530